# மகிழ்ந்து வாழுவோம்!

--பல்லவி—

கண்ணில் ஒரு மின்னல் வந்து,
காதலென்று சேதி சொன்னதோ!
பண்ணில் விழும் இசை நிறைந்து,
பாடலாகும் நிலை கொண்டதோ!
உண்மையிதில் உலகமதும் உறங்கிப்
போகும் காலம் வந்ததோ!
தண்மையினால் நன்மைதனை;
நாமும் தேடிச் செல்வோமோ!

- சரணம் -

உள்ளமதில் ஒளிபிறக்க உவகை கொள்ளுவோம்!
கள்ளமில்லா அன்புதனை காட்டி மகிழுவோம்!
வள்ளல் குணம் கொண்டோரை வளர்த்து மகிழுவோம்!
(கண்ணில்..)

வாழும் உயிர் அத்துனையும் அணைந்து கொள்ளுவோம்!
தாழும் நிலை யாவற்றுக்கும் இல்லையென்றோதுவோம்!
வீழும் மனப் போராட்டங்கள் விரைந்து நீக்குவோம்!
(கண்ணில்..)

நாமும் நல்ல மாந்தரென்று மண்ணில் வாழுவோம்!
தாவும் அன்பில் நல்ல கலைகள் நாளும் தேற்றுவோம்!
மூளும் இன்பத்தில் அன்பில் திளைந்து வாழுவோம்!
(கண்ணில்..)

மண்ணில் வாழும் யாவரையும்,
அணைந்து கொள்ளுவோம்!
மானிட வாழ்வின் பெருமைதன்னை;
உலகில் ஏற்றுவோம்!

- கவிஞர் கவிவளவன்

31-12-2021 (11.45 பி.எம்.)